நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீலை திங்கள் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்கு விசாரணை வழக்கு எண் : 1383 / 2025

CNR.No.TNTT07-004619-2025

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| 1 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண். 194/2025 |
| 2 | புகார்தாரர் | தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர் |
| எதிரியின் விபரங்கள் | | |
| 3 | பெயர் | 1. நம்பிராஜன்<br>2. ஐசக் ஜெபதுரை |
| 4 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | 1. முத்துவீரன்<br>2. சிம்சன் |
| 5 | வேலை | – |
| 6 | முகவரி | 1. 4 வது தெரு, ஸ்டாலின் காலனி, கோவில்பட்டி.<br>2. சுப்பிரமணியாபுரம் 2 வது தெரு, கோவில்பட்டி. |
| 7 | வயது | 1. 37/2025<br>2. 34/2025 |
| தேதி | | |
| 8 | சம்பவம் | 27.04.2025 |
| 9 | புகார் | 15.05.2025 |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:05:05 +0530

| | | |
|---|---|---|
| 10 | எதிரியின் கைது விபரம் | எதிரிகள் கடந்த 01.05.2025 அன்று கைது செய்யப்பட்டுள்ளார்கள். |
| 11 | பிணை விபரம் | எதிரிகள் கடந்த 01.05.2025 அன்று காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். |
| 12 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 16.02.2026 |
| 13 | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 23.07.2026 |
| 14 | தீர்ப்புரை | சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை BNS பிரிவுகள் 126(2), 115(2) படியான இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை விடுதலை செய்து BNSS பிரிவு 278(1) கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | – |
| 16 | காலதாமதத்திற்கான விளக்கம் | எதிரி மற்றும் சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதினால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கு 09.08.2025 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 (பொறுப்பு), கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தாங்களே முன்னிலை ஆகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 23.07.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**எதிரிகடள மீது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :**

1) 27.04.2025 ஆம் தேதி 21.30 மணியளவில் கோவில்பட்டி புதுரோடு இறக்கத்தில் உள்ள No.1 Bar ன் அருகே சாட்சி 1 செண்பகராஜ், சாட்சி 2 சுரேஷ் உடன் பேசிக்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.24 19:05:10 +0530

கொண்டே நடந்து சென்ற போது, கோவில்பட்டி சுப்பிரமணியாபுரத்தில் உள்ள காளியம்மன் கோவில் கட்டுவது சம்மந்தமாக சாட்சி 1க்கும், 1வது எதிரிக்கும் இடையயுள்ள முன்விரோதம் காரணமாக 1, 2வது எதிரிகள், சாட்சி 1யை வழிமறித்து நீ என்ன பெரிய ஆளா ஊருக்குள்ள நாங்க காளியம்மன் கோவில் கட்டுனா உனக்கென்ன என்று சொல்லி எதிரிகள் இருவரும் கையால் சாட்சி 1ன் முதுகிலும், நெஞ்சிலும் மாறி மாறி அடித்துக் கீழே தள்ளி சாட்சி 1க்கு வலது கை பெருவிரலில் சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாக கோவில்பட்டி கிழக்கு காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது BNS பிரிவுகள் 126(2), 115(2) கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230ன் படி கடந்த 13.02.2026 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரிகள் மீது BNS பிரிவுகள் 126(2), 115(2) படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் எதிரிகள் மீது மேற்படி பிரிவுகளின் குற்றச்சாட்டுகள் குறித்து கேள்வி கேட்கப்பட்ட போது எதிரிகள் மேற்படி குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார்கள்.

3) எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்களும் குறியிடப்பட்டன. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

4) அசா.1 செண்பகராஜ், புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என்று சாட்சியமளித்துள்ளார். இந்த வழக்கில் அரசு தரப்பில்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.24 19:05:15 +0530

தாக்கல் செய்யப்பட்ட BNSS பிரிவு 348–ன் கீழான எம்.பி.எண்.1/2026 என்ற மனுவானது கடந்த 20.07.2026 அன்று அனுமதிக்கப்பட்டு அசா.2 அங்குத்தாய் (உதவி ஆய்வாளர்) கூடுதல் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். கடந்த 27.04.2025 ஆம் தேதி தலைமைக் காவலர் கணேசன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அசா.1 செண்பகராஜ் என்பவர் கொடுத்த அசா.ஆ.2 புகார் வாக்குமூலத்தைப் பதிவு செய்து அசா.ஆ.3 மனு ரசீது எண்.589/2025 கொடுத்ததை உதவி ஆய்வாளர் கமலாதேவி அவர்கள் பார்வையிட்டு அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.194/2025, BNS பிரிவுகள் 115(2), 126(2) ஆக அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். காயத்தகவல் அசா.ஆ.2 ஆகும்.

5) அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் கமலாதேவி, 28.04.2025 அன்று 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மதன்குமார் மற்றும் செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 01.05.2025 ஆம் தேதி எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. விக்னேஷ் என்பவரை விசாரித்து அசா.1 ன் அசா.ஆ.8 காயச்சான்று பெற்றுள்ளார். விபத்து பதிவேடு அசா.ஆ.9 ஆகும். பின்பு மேற்படி வழக்கை உதவி ஆய்வாளர் செந்தில்வேல் முருகன் அவர்கள் மேல் விசாரணை செய்த போது மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியது போல் அவரிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு சாட்சிய விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 15.05.2025 அன்று குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.24 19:05:20 +0530

சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து 23.07.2026 அன்று BNSS 351(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**பிரச்சினையும், தீர்வும் :**

7) அரசுத் தரப்பில், எதிரிகள் முறையற்ற வகையில் தடுத்து, அடித்ததாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது.

8) மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகளைத் தண்டிக்க வேண்டும் என்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். இந்நிலையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் நோக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட புகார்தாரரான அ.சா.1 செண்பகராஜ் தனது சாட்சியத்தில்

> "1.... ஆஜர் இல்லாத எதிரிகளை எனக்கு தெரியும். அவர் அவர்கள் எனது நண்பர்கள். சம்பவ காலத்தில் யார் என்னை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதனால் சந்தேக்தின் பேரில் எதிரி மீது புகார் வாக்குமூலத்தில் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக எனது நண்பரான சுரேஷ் என்பவரும் கையொப்பம் செய்துள்ளார். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. **(அந்த கையெழுத்து மட்டும் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை."

என்பதாக சாட்சியம் அளித்துள்ளாார்.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:05:25 +0530

9) இந்நிலையில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் நோக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியமளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆனால், அசா.1 அவரது குறுக்கு விசாரணையிலும் அரசுத் தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. அரசுத் தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் முறையற்ற வகையில் தடுத்து, அடித்ததாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. இந்நிலையில் அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யாத பட்சத்திலும், விசாரணை அதிகாரி சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகளைத் தண்டிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) முடிவில் அரசு தரப்பில் எதிரிகள் மீது BNS பிரிவு 126(2), 115(2) கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என BNSS பிரிவு 278(1)ன் கீழ் தீர்மானித்து, மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

11) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் இல்லாததால் அதுகுறித்த உத்தரவில்லை.

12) இவ்வழக்கில் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் எழுதிக் கொடுத்துள்ள பிணைமுறிகளில் BNSS பிரிவு 481-ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறிகள் தவிர மற்றவை ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் BNSS பிரிவு 481-ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:05:30 +0530

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜீலை திங்கள் 24 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.24 19:05:34 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | திரு. செண்பகராஜ் | நிகழ்நிலை புகார்தாரர் சாட்சி |
| 2. | திருமதி. அங்குத்தாய் (உதவி ஆய்வாளர், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையம்) | புலன்விசாரணை குறித்து ஆவணங்கள் அடிப்படையில் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் | ஆவணத்தின் நிலை |
|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலத்தில் உள்ள அசா.1 ன் கையெழுத்து மட்டும் – 27.04.2025 | அசா.1 – 20.07.2026 | அசல் |
| 2 | காயத்தகவல் – 27.04.2025 | அசா.2 – 20.07.2026 | அசல் |
| 3 | புகார் மனு ரசீது – 27.04.2025 | அசா.2 – 20.07.2026 | அசல் |
| 4 | புகார் வாக்குமூலம் – 27.04.2025 | அசா.2 – 20.07.2026 | அசல் |

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.07.24 19:05:42 +0530

| | | | |
|---|---|---|---|
| 5 | முதல் தகவல் அறிக்கை – 28.04.2025 | அசா.2 – 20.07.2026 | அசல் |
| 6 | பார்வை மகஜர் – 28.04.2025 | அசா.2 – 20.07.2026 | அசல் |
| 7 | மாதிரி வரைபடம் – 28.04.2025 | அசா.2 – 20.07.2026 | அசல் |
| 8 | காயச்சான்று – 05.05.2025 | அசா.2 – 20.07.2026 | அசல் |
| 9 | விபத்து பதிவேடு – 27.04.2025 | அசா.2 – 20.07.2026 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்–** இல்லை

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.24 19:05:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி